# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.154/2019

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலுச்சாமி | வா.சா.–1 | |
| த/பெ. | ராமசாமி | | |
| கிராமம் | கட்டங்குடி | தொழில் | விவசாயம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 66 |

---

முதல் விசாரணை 22–04–2026.

நான் இந்த வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். தற்போது வாதிக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் சாட்சியமளிக்கிறேன். வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) பிராது வரைபடம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 15.07.1929ம் தேதிய ஞானம்மாளுக்கு நாராயணரெட்டியார் எழுதிக்கொடுத்த அடமானம் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) 10.07.1946 ம் தேதிய குருசாமிரெட்டியாருக்கு வெங்கிடம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 05.07.1948 ம் தேதிய சீத்தாலெட்சுமி அம்மாள் குருசாமி ரெட்டியாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 08.07.1948 ம் தேதிய குருசாமிரெட்டியார் வகையறா செய்துகொண்ட பாகவிஸ்தி பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) 18.08.1948 ம் தேதிய நாராயணரெட்டியாருக்கு ராமசாமி ரெட்டியார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) 20.09.1954 ம் தேதிய குருசாமிரெட்டியார் குருவம்மாளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(8) 01.08.1955 ம் தேதிய ஞானம்மாளுக்கு நாராயணசாமி ரெட்டியார் மற்றும் ஆவுடையம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(9) 03.08.1971 ம் தேதிய வெங்கிடரெட்டியார் பாண்டியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(10) 26.07.1985 ம் தேதிய பெரியசாமிக்கு மீனம்மாள் வகையறா எழுதிக்கொடுத்த அடமானப்பத்திரம் அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(11) 25.03.1990 ம் தேதிய மீனம்மாள் பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா பட்டா எண்.537 அசல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(12) 25.03.1990 ம் தேதிய மீனம்மாள் பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா பட்டா எண்.538 அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(13) மீனம்மாள் பெயரில் உள்ள 2015−2016 க்கான வீட்டுவரிரசீது அசல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(14) மீனம்மாள் பெயரில் உள்ள 2015−2016 க்கான வீட்டுவரிரசீது அசல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(15) 06.06.2016 ம் தேதிய மீனம்மாள் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(16) 09.03.2015 ம் தேதிய மீனம்மாள் பெயரில் உள்ள கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் வரைபடம் அசல் வா.சா.ஆ−16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(17) வாதிகள் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அப்பீல் மனு அலுவலக நகல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(18) 15.12.1949 ம் தேதிய லட்சம்மாளுக்கு பார்த்தசாரதி ரெட்டியார் எழுதிக்கொடுத்த ஜீவனாம்ச பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை மேலும் குறியீடு செய்யவேண்டி முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.04.22 14:26:25 +0530